பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 02 | புதன்கிழமை | 17.05.2023 | கதிர் 188

### அதிகாரப் பகிர்வு தொடர்பான

# சகல பேச்சிலும் முஸ்லிம்களும் இனிமேல் உள்வாங்கப்படுவர்

## அமைச்சரின் வலியுறுத்தலை ஏற்றார் ஜனாதிபதி

கொழும்பு, மே 17


அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் பேச்சு சகலதிலும் முஸ்லிம் தரப்புக்கள் உள்வாங்கப்பட வேண்டுமென்ற அமைச்சர் நஸீர் அஹமடின் வேண்டுகோளுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுக்களில் பங்கேற்ற அமைச்சர் நஸீர் அஹமட், எந்தச் சமூகங்களுக்கும் அநீதியிழைக்கப்படாத வகையில் இனப்பிரசினைக்கான தீர்வுகள் அமைவது அவசியம் என்பதை வலியுறுத்தினார் எனவும் தெரிவித்தார்.

2



## இனி இது ரகசியம் அல்ல!



புதிய ஆளுநர்கள் இன்று பதவியேற்கிறார்கள். வடக்குக்கு மீண்டும் பி.எம்.எஸ்.சாள்ஸ், கிழக்குக்கு செந்தில் தொண்டமான், வடமேல் மாகாணத்திற்கு லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார்கள் என்று தெரிகின்றது. இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இது தொடர்பான நிகழ்வுகள் இடம்பெறும்.

பி.எம்.எஸ்.சாள்ஸ் ஏற்கனவே ஒருதடவை வடக்கு மாகாண சபை ஆளுநராகப் பதவி வகித்தவர். அப்போதைய அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்சவினால் அவருக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டது. ஆனால், அவரது பதவிக் காலத்தில் பல குற்றச்சாட்டுக்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவராக இருந்தார். காணிகள் விடயத்தில் அதிகாரிகளுக்கு அவரால் நெருக்கீடுகள் இருந்தன என்கிற குற்றச்சாட்டும் அவற்றில் ஒன்று. காணிகள் என்றால், படையினருக்கு காணி வழங்குவது அல்ல, சொந்தத் தேவைகளுக்கான காணிகளைப் பெறுவதில் அவர் தனது அபரிமிதமான

2

## எல்லே குணவங்கக தேரர் எச்சரிக்கை

எமது அமைதியை இயலாமையாகக் கருதவேண்டாம் என்று எச்சரித்தார் எல்ல குணவங்க தேரர் தெரிவித்தார்.

சர்வமதத்தலைவர்கள் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினர். இதன்போது கருத்து வெளியிட்ட தேரர் மேலும் தெரிவித்ததாவது:

பல்வேறு நாடுகளும் பல்வேறு துறைகள் ஊடாக எமது நாட்டுக்குள் நுழைந்து தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்கின்றன. தயவு செய்து எம்மை வீதிக்கு இறக்குவதற்கு முயற்சிக்கவேண்டாம்.

தேவையற்ற விடயங்களைக் கூறி எம்மைத் தேவையின்றி விமர்சிப்பவர்களுக்கு இதனையொரு முன்னெச்சரிக்கையாகக் கூறுகின்றோம். அத்துடன் தயவு செய்து, இனங்களுக்குள்ளும்,

2

## ஆளுநர் பதவியிலிருந்தபோது அரசியல் அழுத்தம் இருந்தது

### பதவி விலக்கப்பட்ட கிழக்கு ஆளுநர் அநுராதா தெரிவிப்பு



கட்சி அரசியல் சாராத எனது செயற்பாடுகளை முன்னெடுத்த சமயத்தில் அரசியல் அழுத்தங்கள் காணப்பட்டன என்று கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அநுராதா யஹம்லத் தெரிவித்தார்.

ஆளுநர் பதவியிலிருந்து நேற்றுமுன்தினம் நீக்கப்பட்ட அவர் நேற்றையதினம் கிழக்கு மாகாண ஆளுநர் இல்லத்திலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறினார். அதற்கு முன்னதாக அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

2

## அமைச்சர் பந்துலவின் விளக்கம்



புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது ஆட்சியாளர்களின் கடமை. அதனால்தான் கொழும்பின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு இன்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது கொழும்பில் திடீரென்று அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்

2

## அமரபுர பீட மகாநாயக்கர் காலமானார்



அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் தொடம்பஹல சந்தசிறி தேரர் தனது 84 ஆவது வயதில் நேற்று இயற்கை எய்தினார்.

கடந்த சில நாட்களாக சுகயீனமுற்று கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று பிற்பகல் அவர் காலமானார்.

1939ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி மாத்தறை

2

## மூதூரிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



மூதூர் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

2009ம் ஆண்டு இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்காக ஒரு நிமிட

2

### யாழ். பல்கலைக்கழக

## முகாமைத்துவ வளாகத்திலும் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி பால்பண்ணையில் அமைந்துள்ள முகாமைத்துவ பீடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் கஞ்சி செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக

2

## சஜித்தே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியவற்றின் ஜனாதிபதி வேட்பாளராககச சஜித் பிரேமதாசவை பெயரிடுவதற்கு செயற்குழு ஏகமனதாக அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டம் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியவற்றின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித்பிரேமதாசவை

2

## ஐதேகவுடன் சஜித் கட்சி ஒன்றிணையவேண்டும்

### வடிவேல் சுரேஸின் விருப்பம் இதுதானாம்

ஐக்கியதேசியக் கட்சியும் ஐக்கியமக்கள் கட்சியும் ஒன்றிணையவேண்டும் என்று தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் தலைவரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ்

2

## சர்ச்சைப் போதகர் ஜெரோம் இலங்கைக்குத் திரும்புகிறார்

### காத்திருக்கிறது சி.ஐ.டி.

ஏனைய மதங்களை அவமதிக்கும் வகையில் சர்ச்சைக்குரிய பிரசங்கங்களை வழங்கிய கிறிஸ்தவ மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள

2

## சப்பாத்துக் கால்களால் உதைந்து கழுத்தைப் பிடித்து நெரித்தனர்

### மணலாறில் பெண் மீதான வன்முறையில் கொடூரம்

(ந.லோகதயாளன்)

மணலாற்றுப் பகுதியில் பாலியல் வன்புணர்வு முயற்சிக்கு உள்ளாக்கப்பட்ட பெண் கடுமையாகத் தாக்கப்பட்டுக் காயமடைந்திருக்கின்றார் என்று முல்லைத்தீவு வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது நெஞ்சில் சப்பாத்துக் கால்களால் உதைந்ததில் பலத்த காயம்

2

## மீன்பிடிக்கச் சென்றவர் தோணி கவிழ்ந்து சாவு

மட்டக்களப்பு, கல்லடி தனியார் விடுதிக்கு அருகிலுள்ள வாவியில் தோணியில் மீன்பிடிக்கச் சென்றவர்களில் ஒருவர் தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கல்முனை, பாண்டிருப்பு எல்லை வீதியைச் சேர்ந்த 35 வயதுடைய உதயராஜன் தனேஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார்

2

## பணம் கொடுத்து எம்.பிக்களை ஈர்க்க ஆளும் தரப்பினர் முயற்சி

### நாடாளுமன்ற உறுப்பினர் நெல்சன் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணம் கொடுத்து வாங்குகிறார்கள் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் குற்றஞ்சாட்டினார்.

பொலன்னறுவையில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கப்படுகின்றது. அதற்கு நாம் தயார் என்றுதான் எப்போதும் கூறுகின்றோம். ஆனால் தற்போது எதிர்க்கட்சி

2

## மருத்துவ பீட மாணவர்கள் கொழும்பில் விரட்டியடிப்பு

### ஆரப்பாட்டம் மீது பொலிஸார் நீர்த் தாரை தாக்குதல்

தனியார் மருத்துவக் கல்லூரியைத் தொடங்ககுவதற்கு எதிராக அரச மருத்துவ மாணவர்கள் கொழும்பில் செவ்வாய்க்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியபோது பொலிஸார் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தி அதனைக் கலைத்தனர்.

இலங்கையில் மீண்டும் தனியார் மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு ஆட்சியினால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமைக்கு எதிரான கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் ஒன்று கூடிய மருத்துவத்துறை மாணவர்கள் கண்டங்களை வெளியிட்டவாறு பேரணியாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகம் நோக்கிச் செலத் தொடங்கினர்.

ஹோட்டன் பிளேசுக்கு அருகில் பொலிஸார் பேரணியைத் தடுத்து நிறுத்தினர். வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் அவர்களை கலைந்து செல்லுமாறு அறிவித்தனர்.

நாம் வைத்தியத்துறை மாணவர்கள், அமையதியாகவே

2

## மருத்துவத்துறையில் மனித வள பற்றாக்குறை டெங்கு நோய் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

120 வகையான மருந்துகளுக்கு இன்னமும் தட்டப்பாடு நீடிகின்ற நிலையில், மருத்துவத்துறையில் மனித வளத்துக்கும் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்த மருத்துவத் துறையும் நெருக்கடிகளுக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பானது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு அச்சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் 2017ஆம் ஆண்டே டெங்குவின் தாக்கம் மிகவும் தீவிரமாக இருந்தது. அக்காலத்தில் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் பதிவாகியிருந்தனர். அக்காலத்தில் அதிகப்படியான டெங்கு இறப்புகளும் பதிவாகியிருந்தன.

சமகாலத்தில் நாட்டில் மருந்துகளுக்குத்

2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செல்வாக்கைச்செலுத்தமுற்பட்டார் என்கிற குற்றச்சாட்டு. இந் தக் காரணங்களால் பின் னர் கோட்டாபயவே அவரைப் பதவியில் இருந்து நீக்கி விட்டார். ஆனால், அவர் மனம்நோகாமல்தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் ஒத்தி வைப்பதற்கான முயற்சியில் இறங்கியிருந்த ரணில் விக்கிரமசிங்க, முதலில் ஆணைக்குழு தேர்தலை நடத்தும் முடிவை எடுக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த முயன்றார். ஆனால் அது சரிவராத நிலையில், ஆணைக் குழுத் தலைவருக்கு ஏனைய உறுப்பினர்களின் ஆதரவில்லை என்று மக்களை நம்ப வைக்கமுயன்றார்.தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எடுக்கும் முடிவுகளுக்கு உறுப்பினர்கள் ஆதரவில்லைஎன்று அவர் பகிரங்கமாகவே தெரிவித்துமிருந்தார்.

அப்படிஅவர்தெரிவித்ததை உறுதிப்படுத்தக்கூடிய வகையில்ஆணைக்குழுவில்இருந்த பதவி விலகியவர் அம் மையார் சாள்ஸ் மட்டுமே. அந்த நன்றிக்கடனுக்காகவும் அப்போதே வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைவாகவும்தான் இப்போது அவருக்கு மீண்டும் ஆளுநர் பதவிவழங்கப்பட்டிருப்பதாகக் கொழும்பில் பேச்சு. முதல் பதவிக் காலத்தைப் போன்று இல்லாமல்தனதுஇரண்டாவது பதவிக் காலத்தில் திறம்பட்ட நிர்வாகத்தை, தமிழ்மக்களின் நலன் நோக்கில் இருந்து அவர் ஆற்றுவார் என்று எதிர் பார்ப்போம்.

ஆனால்.அவர்பதவியைப் பொறுப்பேற்று யாழ்ப்பாணம் வரும்போது ஆளுநர் அலுவலகத்தில் இருந்த இரு மாடுகளும்இருக்குமாகஎன்பதுதெரியவில்லை. அந்த மாடுகள் இரண்டும் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்டவை. அவற்றை வழங்குமாறு எழுத்தில் ஆளுநர் அலுவலகம்கோரியதன்பெயரிலேயே ஆளுநர்செயலகத்திற்குவழங்கப்பட்டுள்ளது.

ஆளுநர் செயலக வளாகத்தில் அதிக புல் இருப்பதனால்அதனைமேய்வதற்காக அந்த மாடுகளை வழங்கு மாறுகேட்கப்பட்டதால்வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆளுநரின் செயலாளரால் ஒப்பமிட்டு அனுப்பப்பட்டுக் கடிதத்தின் பெயரில் யாழ்ப்பாணம்நீதிமன்றினால் அரசுடமை ஆக்கப்பட்ட இந்த இரு மாடுகளும் வழங்கப்பட்டன.

அரசஉடமையாக்கப்பட்ட மாடுகள் அரச கால்நடைத் திணைக்களத்திடம்ஒப்படைக்கப்பட்ட நிலையில் மற்று மோர் அரச திணைக்களம் என்ற அடிப்படையில் அது ஆளுநர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டதாகவும், அவற்றைத் தற்போது திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கையில்உரியதிணைக்களம் ஈடுபட்டிருப்பதாகவும்தெரிவிக்கப்படுகின்றது. அதனால் ஆளுநரோடு சேர்த்து மாடுகளுக்கும் கிளிநொச்சிக்கு வழங்கப்பட்ட இடம்மாற்றம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இனி வரும் நாட்களில் புற்களை யார் துப்புரவாக்குவார்களோ தெரியாது.

அரசுத் தலைவருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடந்த பேச்சின் உள்விவகாரங்கள், அதன் பின்னணி என்பவற்றைபற்றிய விவரங்களை நாளை விரிவாக உங்களுக்குச் சொல்கிறேன் வாசகர்களே! அதுவரையில் பொறுத்துக்கொள்ளுங்கள்.

- இடிமின்னல் -

## சகல பேச்சிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதுபற்றி, அமைச்சர் நஸீர்அஹமட் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் கட்சிகளுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில் அமைச்சரவை அந்தஸ்துள்ளன மூன்று அமைச்சர்கள் பங்கேற்றனர். இதில், பங்கேற்ற எனக்கு முஸ்லிம்கள் சார்பில் கருத்துக்களை முன்வைக்க முடிந்தது.

வடக்கு,கிழக்கில் தமிழ் மொழிச் சமூகங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் முஸ்லிம்களும் அதிகளவை எதிர்கொள்கின்றனர். போரில் பாதிக்கப்பட்டவர்களில் முஸ்லிம்களும்முக்கியமானார்கள். எனவே, இழக்கப்பட்ட காணிகள், இருப்புக்களுக்கான உத்தரவாதம், தேசிய இனத்துக்கான தனித்துவ அடையாளங்கள் என்பவை முஸ்லிம்களுக்கும்உத்தரவாதப்படுத்தப்படல் அவசியம்.

இது, இனப்பிரச்சினைக்கான தீர்வில் உறுதிப்படுத்தப் படவேண்டும். சகோதர சமூகங்களின் அபிலாஷைகளில் குறுக்கிடுவதாக இது அமையாது.

இதுபற்றிய புரிதல்களை தமிழ்தரப்பினருக்கு எடுத்துக் கூறுவதற்கு எதிர் காலப் பேச்சுக்களில் முஸ்லிம் தரப்புக்களும் அழைக்கப்படுவது அவசியம்.

மாகாண சபை திருத்தச்சட்டங்களில் முஸ்லிம்களுக்கு சந்தேகம் நிலவுகிறது. பிரதிநிதித்துவங்களைகுறைக்கும் வகையில், இத்திருத்தங்கள் இருத்தலாகாது. அவ்வாறிருப்பது, முஸ்லிம்களின் பெரும்பான்மை பலத்தை இழக்கச் செய்யும் - என்று தான்சுட்டிக்காட்டினார்என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

## எல்லே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மதங்களுக்குள்ளும்குழப்பங்களை ஏற்படுத்தவேண்டாம்.

டொலர்களில்தங்கியிருக்கின்றோம்என்பதற்காகமக்கள் மத்தியில் முரண்பாடுகளை ஏற்படுத்தவதற்கு 'அவர்களுக்கு' இடமளிக்க முடியாது.

எமது அஹிம்சையையும், அமைதியையும் இயலாமையாகக் கருதவேண்டாம். நாம் நாளையதினம்(இன்று) உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் - என்றார்.

## ஆளுநர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர்அங்குதெரிவித்ததாவது:

நான் கட்சி அரசியல் சாராது எனது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தேன். இருப்பினும் பல செயற்பாடுகளை முன்னெடுத்த வேளையில் அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

இருப்பினும், மக்களுக்காகத் திட்டமிட்ட செயற்பாடுகளை நாம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இயலுமானதாக இருந்தது. எனது பதவிக்காலத்தில் ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் மிக்க நன்றிகள்.

ஒழுக்கமானதொரு எதிர்கால சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்காக நாம் அனைவரும்ஒன்றிணைந்து செயற்படவேண்டும்-என்றார்.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலனாய்வுப்பிரிவினரால் வழங்கப்படும் தகவல்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தபோதும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் பல உயிர்களை இழக்க நேரிட்டது.

நாட்டில் பொருளாதாரத்தனை கட்டியெழுப்ப முடியாத அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டது. ஆகவே தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கிடைக்கின்ற புலனாய்வுத் தகவல்களை அடிப்படையாக வைத்து தேவையான நடவடிக்கைகள்எடுக்கவேண்டியது ஆட்சியாளர்களின் கடமையாகின்றது - என்றார்.

## அமரபுர பீட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடம்பஹலவில் பிறந்த மகாநாயக்க தேரரின் இயற்பெயர் எதிரிவீர பட்டபெந்திகேசுகுணதாஸ ஆகும்.

1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி துறவறம் பூண்ட மகாநாயக்க தேரர் சமயப் பணியை ஆரம்பித்தார்.

தொடம்பஹல மத்திய கல்லூரியில் கல்விப் பயணத்தை ஆரம்பித்த தொடம்பஹல சந்தசிறி நாயக்கத் தேரர் துறவறம் பூண்டதன் பின்னர் மாத்தறை வீரபா பிரிவெனாவில் ஆரம்பக் கல்வியையும் காலி வித்தியாலோக்க பிரிவெனாவில் உயர் கல்வியையும் தொடர்ந்தார்.

1962 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி தேரர் உபசம்பதா நிலைக்கு உயர்த்தப்பட்டார். 2021 ஆம் ஆண்டு ஜுலை 20 ஆம் திகதி அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அக்கமஹா பண்டித்த தொடம்பஹல சந்தசிறி மகாநாயக்க தேரர் புத்த சாசனத்தின் முன்னேற்றத்திற்காக சேவையாற்றியுள்ளார். மகாநாயக்க தேரரின் புகமுடல் இராஜகிரிய கல பளுவாவ கோதமி தபோ வனத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

## மூதூரிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மௌன பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில், மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள்பலர்கலந்துகொண்டனர்.

## முகாமைத்துவ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாணவர் ஒன்றியமும் முகாமைத்துவபீட மாணவர் ஒன்றியம் இணைந்து இதனை முன்னெடுத்திருந்தனர்.

முள்ளிவாய்க்காலில் திட்டமிடப்பட்ட இனப்படு கொலையினால் உயிர்நீத்த உறவுகளிற்கு மாணவர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் மூன்று மொழிகளிலான துண்டறிக்கையும் விநியோகிக்கப்பட்டது.

சிங்கள மாணவர்கள் பலரும் நினைவேந்தலில் கலந்து கொண்டிருந்தனர்.

## ஐதேகவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க் கிழமை நடத்திய செய்தியா ளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டங்களில் பெரும் பிரச்சினைகள் காணப் படுகின்றன. சம்பளப் பிரச்சினை, காணிப் பிரச்சினை, ஆட்சியாளர்களால் வழங்கப்படுகின்ற நலன்புரித் திட்டங்கள் அந்த மக்களைச் சென்றடைவது தொடர்பில் பிரச்சினை என்ற பட்டியல் உள்ளது.

இந்த விடயங்கள் சம்பந்தமாகத் தான் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கின்றேன். அவருடன் மீண்டும் முப்பதாம் திகதி பேசவுள்ளேன்.

அதேநேரம், சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். இந்த மக்களுக்குரிய விடயங்கள் கிடைத்தால் தான் எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் அந்த மக்களின் பங்களிப்பு இருக்கும்.

2025ஆம் ஆண்டு யார் ஜனாதிபதி, யார், நாடாளுமன்ற உறுப்பினர் என்பதை அம்மக்களே தீர்மானிக்கவுள்ளார். ஆகவே அந்த மக்களுக்காக எனது செயற்பாடுகள் இருக்குமே தவிரவும் எந்த அமைச்சினைப் பெறுவது என்பது பற்றியதாக இருக்காது.

அதேநேரம், எம்மைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியும், சஜித்பிரேமதாசதலைமையிலான ஐக்கிய மக்கள்சக்தியும்ஒன்றிணைய வேண்டும். அதன் மூலம் தான் இந்த நாட்டின் தேசிய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் என்றார்.

## சர்ச்சைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதிவில், வணக்கம் குடும்பத்தினரே, நீங்கள் அனைவரும் அறிந்தது போல, நான் முன்பு திட்டமிடப்பட்ட அதிகாரப்பூர்வ பயணங்களில் ஈடுபட்டு வருகிறேன், ஞாயிற்றுக்கிழமைநாடுதிரும்புவேன் என்றுள்ளார்.

ஜெரோம்பெர்னாண்டோ என்ற கிறிஸ்தவ மத போதகர் ஏனைய மதங்களை அவமதிக்கும்வகையில்சர்ச்சைக்குரிய பிரசங்கங்களை வழங்கிய காணொளி ஒன்று கடந்த சில நாட்களாக சமூக வலைத்தளங்களில் பரவி நாட்டில் பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதையடுத்து, அவர் கடந்த 14 ஆம் திகதி தனது மனைவி மற்றும் 2 மகள்களுடன் நாட்டை விட்டு வெளியேறினார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரது கருத்துக்கள் குறித்து விசாரணை நடத்தும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிரான பயணத் தடையை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கோட்டை நீதிவான் நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை பெற்றனர்.

முன்னதாக, மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் ஜெரோம் பெர்னாண்டோ விடுத்துள்ள கருத்துக்களை வன்மையாகக் கண்டிப்பதாக கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் செய்தியாளர் சந்திப்பு செவ்வாய்க்கிழமை பொரளையில் நடைபெற்றது. சபையின் ஊடகப்பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

அண்மையில் மத பிரசங்கத்தின்போது ஜெரோம் பெர்னாண்டோஎன்பவர்வெளியிட்ட கருத்துக்கள் நாட்டின் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கின்றது என்பதைநாம்அடையாளம்கண்டுள்ளோம்.

ஜெரோம்பெர்னாண்டோவிற்கும், கத்தோலிக்க திருதச்சபைக்கும், கத்தோலிக்க குருமாருக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லைஎன்பதைநாம்இங்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் காரணமாக ஏனைய மதத்தினர் அவரை மையப்படுத்திவெளிப்படுத்தும் பிரதிபலிப்புக்கள் மோசமானவையாக இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இதே போன்ற கருத்துக்களை வெளி யிட்ட அரசியல், மத தலைவர்களால் இனங்களுக்குள், மதங்களுக்குள் மோதல்கள் ஏற்பட்டிருந்ததை நாம் கண்டுள்ளோம்.

அதிகாரத்தினைக் கைப் பற்றுவதற்காக இன, மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதை மிகச்சிறந்த இலகுவான வழியாக பலர் பயன்படுத்துகின்றார்கள். அதற்கு நாம் தொடர்ந்தும் இடமளிக்க முடியாது.

ஆகவே மீண்டும் அவ்வாறானதொரு சூழல் ஏற்படுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்காது, தீர்மானங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஜெரோம்பெர்னாண்டோவிற்கு நிதி உதவி அளிக்கும் வெளிநாட்டவர்கள், ஆதரவளிப்பவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கண்டறிய முடியாது போயுள்ளமை ஆச்சரியமளிக்கின்றது - என்றார்.

## சஜித்தே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெயரிடவேண்டும் என்று சுஜீவ சேரசிங்க முன்மொழிவைச் செய்தார்.

இதனையடுத்து பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டரவும் அதனை வழிமொழிந்தார். தொடர்ந்து செயற்குழு ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

# பொதுமக்களின் சுகாதார மேம்பாட்டை உறுதிப்படுத்த உள்ளூராட்சிமன்றங்களுடன் விசேட கலந்துரையாடல்

கல்முனை சுகாதார பிராந்தியத்துக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்ளுடனான கலந்துரையாடல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல் மற்றும் தொழில்வாண்மைசுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரிவைத்தியர்ஏ.எஸ்.எம். பௌசாதினால் இணைப்புச் செய்யப்பட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில்நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் டெங்கு கட்டுப்பாடு மற்றும் உணவகங்களில் சுத்தமான சுகாதாரமான உணவினை வழங்குவதை உறுதிப்படுத்துதல் மற்றும் மீன் விற்பனையில் மண் கலப்படம் விலங்கறுமனைகளின்தரம்மற்றும்உணவகங்களை மேற்பார்வை செய்வது தொடர்பான சுகாதார நிறுவனங்களின் உப விதிகள் உள்ளூராட்சி மன்றங்களின் உப விதிகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றங்களும் சுகாதார நிறுவனங்களும் இணைந்து எதிர்காலத்திலும் குறித்த பிரச்சினைகள் தொடர்பில் ஆரோக்கியமான கலந்துரையாடலை மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதெனவும்பிராந்தியமக்களின் சுகாதார மேம்பாடு டெங்கு கட்டுப்பாடுஉணவகங்களின் தரம்மற்றும்ஏனையசுகாதார நலன் சார் விடயங்களை ஒன்றிணைந்து வெற்றி கொள்வதெனவும்தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்வின் இறுதியாக கடந்த காலங்களில் டெங்கு கட்டுப்பாட்டுக்கு உதவிய உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்களுக்கும் செயலாளர்களுக்கும் பணிப்பாளரால் விசேடமாக நன்றிகள் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், சபை செயலாளர்களும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் எம் பீ.ஏ.வாஜித் மற்றும் பிரிவுத் தலை வர்களும் ஏனைய துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

## சப்பாத்துக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஏற்பட்டுள்ளது. அவரது கழுத்தை நெரித்திருக்கிறார்கள். சத்தம் வெளியே வராமல் தடுக்கும் முயற்சியாகவோ கொலை செய்யும் முயற்சியாகவோ கழுத்து நெரிக்கப்பட்டதால் வீங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தன்னை வன்புணர முயற்சித்தவர்களை எதிர்த்து அந்தப் பெண் கடுமையாகப் போராடியதன் காரணமாக அவரது உடலில் பல இடங்களிலும் தடிகளால் கீறப்பட்டும் நகங்களால் கீறப்பட்டும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

முல்லைத்தீவு வெலிஓயா பகுதியில் கண்ணிவெடி அகற்றும். பணியில் இருந்த இளம் பெண் ஒருவரை இரு ஆண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற சமயம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

வெலிஓயா சோதனைச் சாவடிக்குஅண்மைப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் இருந்த இளம் பெண்ணை முகத்தை மறைத்தவாறு கைகளிற்கு கறுப்பு நிற கையுறை அணிந்தவாறு பெரியசப்பாத்துக்கள் அணிந்த இருவர் காட்டுக்குள் இழுத்துச் சென்று இந்தக் கொடுமையைப் புரிந்துள்ளனர். அணிந்திருந்த காற்சட்டை கழற்றப்பட்ட நிலையில் அவர்களிடமிருந்துதப்பிவந்து மயங்கி விழுந்த அவரைச் சக பணியாளர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

பாதுக்கப்பட்ட பெண் மனநெருக்கீடுகளில் இருந்து வெளிவருதற்கான சிகிச்சை மற்றும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

## மீன்பிடிக்கச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்துள்ளனர்.

குறித்தநபர்வெளிநாட்டில் இருந்து வந்து கல்லடிப் பிரதேசத்தில் திருமணம் முடித்துமூன்றுமாதங்களான நிலையில் அடுத்த வாரம் மீண்டும் வெளிநாட்டுக்குச் செல்லத் தயாராக இருந்த நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

## பணம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுப்பினர்களுக்கு பணம் வழங்கி அவர்களை ஆளும் தரப்பின்பக்கம்ஈர்த்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள்.

குறுகிய நோக்கத்திற்காக ஆட்சியாளர்களின் பின்னால் சென்று அவர்களின் செருப்புக்களை பற்றுவதற்கு நான் தயாரில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அதற்குத் தயாரில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

நாட்டின் எதிர்காலம் சம்பந்தமாக ஆட்சியாளர்கள் எடுக்கின்ற சிறந்த தீர்மானங்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு நாம் தயராகவே உள்ளோம் - என்றார்.

## மருத்துவ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போராடுகின்றோம் என்று மாணவர்கள் தர்க்கம் செய்தனர். எனினும் பொலிஸார் அதற்கு அனுமதி வழங்காத நிலையில், நீர்த்தா ரைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து மாணவர்கள் கலைந்து சென்றதோடு, இந்தநாட்டில் அப்பாவி பெற்றோர்களின் பிள்ளைகளுடைய சுகாதாரக் கல்விக்கும், மருத்துவக் கல்விக்கும் பேரம்பேசப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனைதடுத்துநிறுத்தவேண்டும் என்று கோசமிட்டனர்.

## மருத்துவத்துறை.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தினை நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம். இருப்பினும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

தற்போதுகூட நாட்டில் 120 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதுமட்டுமன்றி பெறக்கூடிய நிலையில் உள்ள மருந்து வகைகள்கூட நீண்ட காலத்திற்குஇருப்பில்இல்லாதநிலைமையே காணப்படுகின்றது.

இதனைவிடவும், குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. சத்திர சிகிச்சைகள் செய்ய முடியாத நிலைமைகள் தோற்றம் பெற்றுள்ளன.

இதனிடையேஅண்மைய காலத்தில் வைத்தியர்களும், தாதியர்களும்பணியிலிருந்து விலகத்தொடங்கியுள்ளார்கள். இதனால் மருத்துவத்துறையில் மனிதவள பற்றாக்குறையும் தொடங்கியுள்ளது.

இந்த நிலைமையில் தான்டெங்குவின்தாக்கம்அதிகரித்து வருகின்றது. டெங்குத் தொற்று அதிகரிக்கையில் அதற்குச்சுகாதாரக்கட்டமைப்பு எவ்வாறு முகங்கொடுக்கும் என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# கோப் குழு அறிக்கையில் வெளிவரும் ஊழல் மோசடிகளை விசாரித்தால் நாட்டுக்குத் தேவையான பணம் கிடைக்கும்

## ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி. சில்வா ஆலோசனை

நாடாளுமன்ற கோப் குழு அறிக்கைகளில் வெளிவரும் ஊழல் மோசடிகள் தொடர்பில் இதுவரை எந்த சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது.

முறையாக விசாரணை நடத்தி, ஊழல் மோசடிப் பணத்தை மீள பெற்றுக் கொள்ள முடியுமானால், அரசாங்கம் இந்தளவு மக்கள் மீது வரிச் சுமைகளை சுமத்தத் தேவையில்லை.

அத்துடன் குற்றச் செயல் ஒன்றில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அறிக்கையிடும்போது அவதானமாக இருக்கவேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

நீதி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குற்றங்கள் தொடர்பில் அறிக்கையிடுவது சம்பந்தமாக ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் செயலமர்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக அரசாங்கம் வரி அதிகரிப்புகளைமேற்கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

நாட்டில் ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியுமானால் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு கிடைக்கும்.

என்றாலும், நாடாளுமன்ற கோப் குழு ஊடாக அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அந்த அறிக்கைகளில் அரச அதிகாரிகளால் இடம்பெற்றிருக்கும் ஊழல் மோசடிகள் தொடர்பில் பல விடயங்கள் வெளிவருகின்றன.

ஆனால், கோப் குழு அறிக்கையில் வெளிவரும் விசாரணை அறிக்கை தொடர்பில் இதுவரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது.

அரச அதிகாரிகளின் கோடிக்கணக்கான மோசடிப் பணத்தை திருப்பி எடுக்க முடியுமானால் சாதாரண மக்கள் மீது வரிச் சுமைகளை அதிகரிக்கவேண்டிய தேவை இருக்காது.

ஆனால், அரசாங்கம் அதனை செய்யாமல் மக்கள் மீது வரி அதிகரிப்புகளை மேற்கொண்டு, நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்கிறது.

அதனால் அரசாங்கம் மோசடிக்காரர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மக்கள் மீது வரியை அதிகரித்து மக்களை கஷ்டத்துக்குள்ளாக்கி வருகிறது.

அதனால் கோப் குழு விசாரணையில் வெளிவரும் ஊழல் மோசடிகள் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற வேண்டும். நீதி அமைச்சு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மேலும். குற்றச் செயலொன்றில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அறிக்கையிடும்போது அவதானமாக இருக்கவேண்டும். பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் சட்டம் தொடர்பில் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

அதேபோன்று ஜனாதிபதி மன்னிப்பு வழங்கும்போது ஜனாதிபதிக்குத் தேவையான முறையில் மேற்கொள்ள முடியாது. அதற்கு படிமுறைகள் இருக்கின் றன. ஆனால், அண்மையில் இடம்பெற்ற குற்றவாளிகளுக்கான ஜனாதிபதி மன்னிப்பு அவ்வாறு இடம்பெற்றதா என்பது சந்தேகமாகும். - என்றார்.

## நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக குஷானி ரோஹணதீர



நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்கு தற்போதைய தலைமை அதிகாரியும் நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகமுமான திருமதி குஷானி ரோஹணதீர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான நியமனத்தை வழங்கியுள்ளார்.

அரசமைப்பு சபையின் அங்கீகாரத்துடன் திருமதி குஷானி ரோஹணதீர 2023 மே 23 முதல் நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஜனநாயக போராளிகள் இந்தியாவுக்குப் பயணம்

ஜனநாயக போராளிகள் கட்சியினர் இன்று (புதன்கிழமை) இந்தியாவின் மும்பைக்கு பயணமாகவுள்ளனர்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் தமிழர்களின் வகிபாகமும், இந்தியாவின் பாதுகாப்பும் எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள கூட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காவே இவர்கள் பயணமாகவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில மாதங்களில் ஜனநாயகப் போராளிகள் கட்சி பல தடவைகள் இந்தியாவிற்கு பயணமாகி இந்தியாவின் முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தது டன் அதன் தொடர்ச்சியாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கு கடும் பங்களிப்பையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொரளையில் சிரிசர உயன அடுக்குமாடி குடியிருப்பில் ஒருவர் வெட்டிக் கொலை

பொரளை சிரிசர உயன அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த மூவர், அங்கிருந்த இளைஞர் ஒருவரைக் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்துள்ளனர் எனப் பொரளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் டி. ஆர்.பிரதீப் குமார் (வயது - 28) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே சந்தேக நபர்கள் மூவரும் கடந்த திங்கட்கிழமை குறித்த வீட்டுக்குள் புகுந்து இந்தக் கொலையை செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், பிரதேசத்தைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒட்டுசுட்டானில் இரு வாகனங்களில் சிறுமிகளைக் கடத்துவதற்கு முயற்சி!

ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் அமைந்துள்ள சின்னசாளம்பன் கிராமத்தில் கடத்தல் முயற்சி ஒன்று இடம்பெற்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய-வருவதாவது -

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சின்னசாளம்பன் கிராமத்தில் பாடசாலைக்கு சென்று வீடு திரும்பிய இரு மாணவிகளை இலக்கு வைத்தே குறித்த சம்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிராமவாசி ஒருவர் தெரிவிக்கையில் -

குறித்த இரு மாணவிகள் பாடசாலை முடித்து வீடு திரும்பும்போது இரு வாகனங்கள் தம்மை பின்தாடொர்ந்தனர் எனவும் அதில் கூலர் ரக, ஹயஸ் ரக வாகனங்கள் பின் தொடர்ந்த நிலையில் ஒரு வாகனத்தில் இருந்து கதவைத் திறந்த ஐந்து பேர் கொண்ட குழுவினர் அந்த சிறுமிகளைத் தாம் வீட்டுக்கு கொண்டுவந்து விடுவதாகவும் கூறியுள்ளனர். குறித்த குழுவினரின் நடவடிக்கைகளை அவதானித்த சிறுமிகள் அங்கிருந்து தப்பியோடி அருகில் உள்ள வீடு ஒன்றிற்குள் ஒளிந்துள்ளனர்.

தம்மை இரு வாகனங்களில் வந்தவர்கள் கடத்த முயற்சித்தனர் எனச் சிறுமிகள் அந்த வீட்டுக்காரர்களுக்கு தெரியப்படுத்திய நிலையில், குறித்த வாகனத்தின் நடமாட்டத்தை தாம் அவதானித்ததாக கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் தொடர்பாகக் குறித்து பொலிஸில் முறைப்பாட்டை வழங்கிய நிலையில், சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தெமட்டகொட வேலைத்தளத்துக்குள் பிரவேசித்த மூவர் பாதுகாப்பு அதிகாரியின் துப்பாக்கியை அபகரிக்க முயற்சி

### வானை நோக்கி சூடு



ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான தெமட்டகொட வேலைத்தளத்துக்குள் பிரவேசித்த மூவரை கைதுசெய்யும் வகையில் வானத்தை நோக்கி சுட்ட பின்னர், அவர்களில் இருவரை கைதுசெய்தனர் என ரயில்வே பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

54 ஏக்கர் பரப்பளவுள்ள தெமட்டகொட ரயில்வே வேலைத்தளத்தை மக்கள் நீண்ட காலமாக பயன்படுத்தி, அங்கிருந்து பல்வேறு பொருள்களைத் திருடி வருகின்றனர் எனப் பாதுகாப்பு தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், அந்த வேலைத்தளத்துக்குள் மூன்று திருடர்கள்நுழைந்ததைஅறிந்தரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களைப் பிடிக்கமுயன்றபோது, ஒருவர்பாதுகாப்பு அதிகாரியிடம் இருந்த துப்பாக்கியைப் பறிக்க முயன்றுள்ளார்.

அப்போது மற்றைய பாதுகாப்புக் குழுவினர் வானை நோக்கி துப்பாக்கியால் சுட, இரண்டு சந்தேக நபர்களை மடக்கிப் பிடித்து கைதுசெய்துள்ளனர்.

இதன்போது இந்த மூன்று திருடர்களையும் சுற்றிவளைத்து மடக்கிப் பிடிக்க சுமார் இரண்டு மணித்தியாலங்களாக பாதுகாப்பு அதிகாரிகள் முயன்றபோதும், அவர்களில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

மேலும், இந்தக் கும்பல் டீசல், ரயில் உதிரிப்பாகங்கள் மற்றும் கம்பிகளை திருடியதாகவும் ரயில்வே பாதுகாப்புத் துறை கூறுகிறது.

## மதவாச்சியில் 16 வயதான சிறுமியைக் கடத்த முயற்சி?

மதவாச்சி நகருக்கு அருகில் வைத்து 16 வயது சிறுமியை பலவந்தமாகக் கடத்த முயற்சித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாய் மதவாச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கடத்தல் முயற்சி இடம்பெற்ற இடத்திலுள்ள சிசிரிவி காட்சிகள் தொடர்பான விசாரணையில் அவ்வாறான சம்பவம் எதுவும் இடம்பெற்றதாகத் தகவல்கள் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், வீதியில் காணப்படும் ஏனைய சிசிரிவி காட்சிகளை மதவாச்சி பொலிஸார் பரிசோதித்து, இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

## மன்னார் கரிசல் கிராமத்தில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்

மன்னார் - பேசாலை பொலிஸ்பிரிவில்உள்ளகரிசல் கிராமபகுதியில்திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் பெரிய கரிசல் பகுதியைச் சேர்ந்த எம்.ஜலீல் (வயது 25) எனத் தெரிய வந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்

பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள கரிசல் கிராமத்தில்உள்ளவீடுஒன்றில் போதைப்பொருள் உள்ளதாக விசேடஅதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் போது குறித்த பகுதிக்கு விசேடஅதிரடிப்படையினர் சென்றுள்ளனர். பின்னர் இரண்டு விசேட அதிரடிப்படையினர் சிவில் உடையில் குறித்த வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

அங்கு சோதனைகளை முன்னெடுக்க முயன்றபோது குறித்த நபர் கத்தியை எடுத்துத் தாக்க முயன்ற நிலையில் அவர்கள் வைத்திருந்த துப்பாக்கியால் குறித்த நபர் மீது சுட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வயிறு மற்றும் கால் பகுதியில் குறித்த நபருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக குறித்த நபர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அதி தீவிர சிகிச்சைப்பிரிவில்சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளைப்பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## டெங்கு குறித்து கவனமாயிருப்போம்

ஏற்கனவே இருக்கும் நெருக்கடிகள் போதாதென்று, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றொரு பாரத்தையும் தலையில் தூக்கிப் போட்டிருக்கின்றது.

120 வகையான மருந்துகளுக்கு இன்னமும் தட்டப்பாடு நீடிகின்ற நிலையில், மருத்துவத்துறையில் மனித வளத்துக்கும் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் சங்கம், இந்தத் தருணத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று எச்சரித்திருக்கின்றது.

டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வருவதாகவும் அதனால் ஏற்படும் இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதாகவும் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ள நிலையில், இந்த எச்சரிக்கை வந்திருக்கிறது. இந்த வருடம் தை மாதத்தில் இருந்து இதுவரையில் 22 பேர் டெங்குக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்திருக்கிறார்கள்.

டெங்கு மற்றும் வரவிருக்கும் ஆபத்துப் பற்றி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க இது தொடர்பில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையில் 2017ஆம் ஆண்டே டெங்குவின் தாக்கம் மிகவும் தீவிரமாக இருந்தது. அக்காலத்தில் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் பதிவாகியிருந்தனர். அக்காலத்தில் அதிகப்படியான டெங்கு இறப்புகளும் பதிவாகியிருந்தன. சமகாலத்தில் நாட்டில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தினை நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம். இருப்பினும் எந்த விதமானநடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவில்லை.

தற்போதுகூட நாட்டில் 120 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதுமட்டுமன்றி பெறக்கூடிய நிலையில் உள்ள மருந்துவகைகள்கூட நீண்ட காலத்திற்கு இருப்பில் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

இதனைவிடவும், குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. சத்திரசிகிச்சைகள் செய்ய முடியாத நிலைமைகள் தோற்றம் பெற்றுள்ளன. இதனிடையே அண்மைய காலத்தில் வைத்தியர்களும், தாதியர்களும் பணியிலிருந்து விலகத் தொடங்கியுள்ளார்கள். இதனால் மருத்துவத்துறையில் மனிதவள பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இவை எல்லாம் சேர்ந்து டெங்கு பெரும் அபாயத்தை உருவாக்கும் சூழலைத் தோற்றுவித்திருக்கின்றன என்கிறார் அவர்.

அவரது எச்சரிக்கை மீது சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களும் தனிக் கவனம் செலுத்தி நிலைமையைச் சமாளிக்கப் போதுமான முயற்சிகளை எடுக்க வேண்டும். பொது மக்களும் போதிய ஒத்துழைப்பு வழங்காமல் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க முடியாது. எனவே ஒவ்வொருவரும் தத்தம் கடமை உணர்ந்து டெங்கு பரவும் சூழல் வீடுகளில், காணிகளில் இல்லாமல் பார்த்துக்கொள்வதுடன், நுளம்பில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகைகளையும் தேடிக்கொள்ளவேண்டும்.

இலங்கையில் கொழும்பு கம்பகாவிற்கு அடுத்து யாழ்ப்பாணமும் கிழக்கு மாவட்டங்களுமே டெங்குத் தாக்கம் அதிகம் உள்ள பகுதிகள். எனவே தமிழர்கள் இது விடயத்தில் மிக அவதானத்துடன் செயற்படுவது முக்கியம்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அனைவரும் அணிதிரள்தல் வேண்டும்

## மாவை சேனாதிராஜா கோரிக்கை



முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் அனைவரும் அணிதிரள வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.

மே18 முள்ளிவாய்கால் நினைவேந்தல் தொடர்பில அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கைக்கு 1948 இல் சுதந்திரம் கிடைத்தது. அந்தச் சுதந்திரம் தமிழர் தேசத்துக்கு, தமிழர் தேசமக்களுக்குக் கிடைக்கவில்லை.

ஐரோப்பியரிடம் போரில் இழந்த சுதந்திரம் தமிழர் தேசத்துக்கும், தமிழ் மக்களுக்கும் திரும்பப் பெறும் உருத்து இலங்கையின் பூர்வீகக் குடிமக்களுக்கு ஆண்டபரம்பரைக்குக் கிடைக்காதநிலையில் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் தேச மக்கள் விடுதலைக்காக ஜனநாயக வழியிலும், ஆயுதவழியிலும் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

கடந்த 70 ஆண்டுகளிலும் பௌத்த சிங்கள ஆட்சியின் மேலாதிக்கம் தமிழர் தேசத்தையும், தமிழ் மக்களையும் பௌத்த சிங்கள மயமாக்கி வருவதும் தமிழர் தேசமும் தமிழ் மக்களும் இன அழிவுக்கு உள்ளாக்கப் பட்டுவருவதையும் சர்வதேசம் நன்கு அறிந்துள்ளது.

இன்றுவரை பௌத்த சிங்கள மயமாக்கப்பட்ட தேசத்தில் தமிழர் போராலும், படையெடுப்புக்களாலும், இனக் கலவரங்களாலும் குறிப்பாக 2009 காலப்பகுதியில் மே - 18 வரை அழிக்கப் பட்டுவரும் நிலையில் எஞ்சியதமிழ் மக்கள் தங்கள் உயிர்களையும் எஞ்சிய தமிழர் தேசத்தையும் பாதுகாக்கவும் இழந்த சுதந்திரத்தை மீட்கவும் போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.

மே 18 நினைவேந்தல் நிகழ்ச்சி முள்ளிவாய்க்கால் முற்றத்திலும் உலகில் தமிழர் வாழும் பிரதேசங்களிலும் நடைபெற்றுவந்துள்ள நிலையில் இலங்கையிலும் நடைபெற மக்கள் அணிதிரளவுள்ளனர்.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர் நீர்த்தவர்களுக்கு அஞ்சலி செய்வது - நினைவு கூர்வது - அவர்தம் பண்பாடாகும். உயர் நாகரிகமாகும். கடந்த பதினான்கு ஆண்டுகளாக இலங்கையில் முள்ளிவாய்க்கால் முற்றத்திலும், தமிழர் வாழ்விடங்களிலும் இந்த நிகழ்வேந்தல் நிகழ்ச்சிகள் நடைபெற்று வரு கின்றன.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர்களைப் பலிகொடுத்த, களப் பலியாகிய மக்கள் ஆத்மாக்கள் நினைவு கூரப்படுவதும் அந்த மக்களிடத்திலே வாழ்நாளில் இறப்பில்லாது வாழ்ந்து- வருவதும் இதயங்களில் நிலைகொண்டுள்ள நம்பிக்கையாகும். அந்த ஆத்மாக்கள் வாழும் மக்களிடத்தில் அந்தரித்து நிற்கும் எனும் நம்பிக்கையுடன் தமிழர் கொள்கை இலட்சியத்தை நிலைநாட்டிநிற்கும் என்ற திடசங்கற்பம் தமிழர் தேசமக்களிடம் நிலைகொண்டுள்ளது.

அந்தமக்கள் அனைவரும் மே - 18 முள்ளிவாய்க்காலிலும் தாம் வாழும் இடங்களிலும் அணிதிரண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நிறைவுசெய்து தமிழர் தேச விடுதலையை அடைவோம் எனும் திடசங்கற்பத்தை நிலைநாட்டிக் கொள்வோம் எனவேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றுள்ளது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்த பொலிஸார் மீது விசாரணைகள்

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த 10.05.2023 அன்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஏற்பாடுசெய்யப்பட்டுவழங்கப் பட்டது.

இதன்போதுஏ-9பிரதான வீதியில் பயணிப்பவர்களுக்கு ஏற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வீதியில் பயணித்த கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதி போக்குவரத்து பொலிஸாரும் பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் பெற்று குடித்தனர்.

வீதிபோக்குவரத்துபொலிஸார் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிக்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிந்தன. பின்னர் அவை சிங்கள ஊடகங்களிலும் வெளிவந்தன.

இதனைத் தொடர்ந்தே குறித்த இரண்டு பொலிஸார் மீதும் விசாரணையை மேற்கொளுமாறு கொழும்பிலிருந்து தகவல் வழங்கப்பட்டு அவர்களுக்கு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2009 இறுதி யுத்தத்தின் போது உணவின்றி தவித்த மக்களுக்கு அப்போது அவர்களின் உயிர்களைப் பாதுகாக்க கஞ்சி வழங்கப்பட்டது.

இதனை நினைவு கூரும் வகையில் வருடந்தோறும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கில் பௌத்தத்துக்கு எதிரானவற்றுக்கு ஆதரவு தெற்கில் பௌத்தபற்றாளர் போல் செயற்படுகின்றார் ஜனாதிபதி!

## விமல் வீரவன்ஸ சாட்டை அடி

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதிதேர்தல்வெற்றிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை அரசியல் கட்சிகளின் கைபொம்மையாகச் செயற்படுகிறார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கி விட்டு தெற்கில் பௌத்த பற்றாளர் போல் செயற்படுகிறார் என தேசிய சுதந்திர முன்னணியில் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் செய்கிறார்.

கோட்டபய ராஜபக்ஷ பதவிவிலகியதைத்தொடர்ந்து ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டார். நாட்டு மக்கள் ஒருபோதும் இவரை அரச தலைவராகத் தெரிவு செய்யமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ளஜனாதிபதிதேர்தலை இலக்காக கொண்டு செயற்படுகிறார்.

இதற்காக அவர் சிறுபான்மை அரசியல் கட்சிகளின் கைபொம்மையாக செயற்படுகிறார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகளைமுன்னெடுக்க ஆதரவு வழங்கி விட்டு தெற்கில் பௌத்த பற்றாளர் போல் செயற்படுகிறார்.



மகாவலி அதிகார சபையை இரத்து செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். மகாவலி அதிகார சபையை இரத்து செய்தால் அதன் பொறுப் பாக்கத்தில் உள்ள அரசகாணிகள் பிரதேச சபைகளுக்கு உரித்தாகும்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் பிரதேச சபை அதிகாரிகள் தமக்கு இணக்கமானவர்களுக்குகாணிகளைபகிர்ந்தளித்துக்கொள்வார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் இதனையே எதிர்பார்க்கிறார்கள். - என்றார்.

# மசாஜ் நிலைய போர்வையில் பாதுக்கவில் விபசார விடுதி

## சுற்றிவளைப்பில் மூவர் கைது

கொழும்பு, மே 17

மசாஜ் நிலையம் என்ற போர்வையில் பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்திய நிலையமொன்றை சுற்றிவளைத்து, அதன் முகாமையாளர் உட்பட மூன்று பெண்களைக் கைதுசெய்ததாக பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட முகாமையாளர் ஹங்வெல்ல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் எனவும், பெரும் தொகையை செலுத்தி குறித்த நிலையத்தை வாடகைக்குப் பெற்றுக்கொண்டு இந்த பெண்களை விபசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது தொடங்கொட, இதுருவ மற்றும் அகலவத்தை பிரதேசங்களைச் சேர்ந்த 23 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


OKAYA ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 02 செவ்வாய்க்கிழமை 16.05.2023 கதிர் 59

## கதிர்காமத்தில் நிலநடுக்கம்

இலங்கையில் கதிர்காமத்தை அண்மித்த பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது என்று புவி சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.


இதற்கமைய நேற்றிரவு ரிக்டர் அளவுகோலில் 2.1 மெக்னிடியூட்டாக நில நடுக்கம் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (02)

### அஸ்கிரிய பௌத்த பீடம் கடும் காட்டம்

# விகாரைகளுக்கு எதிராகத் தமிழ் இனவாதிகள் நடத்தும் போராட்டம் இனமோதலுக்கான சதி

### நடவடிக்கை எடுக்காவிட்டால் விளைவுக்கு ஆட்சியாளர்களே பொறுப்பாம்



இன மோதலை உருவாக்கும் திட்டமிட்ட நோக்கத்துடனேயே வடக்கு கிழக்கில் விகாரைகளுக்கும் தொல்பொருள் இடங்களுக்கும் எதிராக தமிழ் இனவாத அரசியல்வாதிகளும் கடும்போக்குவாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்கள் என்று கடுமையாகச் சாடியிருக்கிறார் இலங்கையின் பௌத்த உயர் பீடங்களில் ஒன்றான அஸ்கிரி பீட பிரதிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர்.

அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இதற்கெதிராக ஒன்றிணைந்து நிற்கும் சிங்கள பௌத்த மக்களால் ஒருநாள் ஏற்படும் பிரச்சினைக்கு இன்றைய ஆட்சியாளர்களே பொறுப்பு என்றும் அவர் எச்சரித்தார்.

திருகோணமலையில் இருந்து ஆளுநரை மாற்றியிருப்பதும் பௌத்த சிங்கள மக்களுக்கு எதிரான ஆட்சியாளர்களின் செயற்பாடு என்றும் அவர் விமர்சித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

## துப்பாக்கிச்சூட்டில் தந்தை மரணம்; மகன் படுகாயம்!

### மாத்தறையில் பயங்கரம்

மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் தந்தை உயிரிழந்துள்ளதுடன் மகன் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தறையில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

தந்தையும் மகனும் பயணித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் துரத்திச் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 52 வயதுடைய கமல் சமிந்த என்பவரே சாவடைந்தார். அவரது சடலம் மாத்தறை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவருடன் வந்த மகன் மோட்டார் சைக்கிளில் இருந்து குதித்து ஓடிய போது அவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## ஆட்சியில் இணையமாட்டேன் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொது ஜன பெரமுன ஆட்சியில் இணையப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டி மல்வத்து பீடமகாநாயக்க தேரரை திங்கட்கிழமை சந்தித்ததன் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு வங்குரோத்து அடைந்துள்ளதுடன் அரசியல் கட்சிகளும் வங்குரோத்து நிலை அடைந்துள்ளன. ஆகவே புதிய அரசியல் முறைமை நாட்டுக்கு அத்தியாவசியமானது.

இளைஞர்கள், தொழில் துறையினர், ஊழல் மோசடியுடன் தொடர்பு படாதவர்கள், சமூகத்தில் மதிக்கத்தக்கவர்கள்

2

## கோட்டா விரட்டியடிப்பு ஒரு சதி வேலை இல்லை

### சஜித் அணி விளக்கம்



கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டியது சதி இல்லை. அது மக்கள் போராட்டம் – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

மக்கள் போராட்டம் என்பது மொட்டுக் கட்சியினர் கூறுவது போல் சதி இல்லை. அது நியாமான மக்கள் போராட்டம். மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை காரணமாக அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடி கோட்டாவை விரட்டியடித்தனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று வீதிக்கு இறங்கிய அத்தனை மக்களும் எதிர்பார்த்தது சிறந்த மாற்றம் ஒன்றை. அந்த மாற்றத்தைக் கொடுக்காமல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. இதனால் எம்.பிக்கள் மிகவும் கவனமாக – பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் எமது ஆட்சி இருந்திருந்தால் சர்வதேச நாணயநிதியத்தின் அனைத்து நிபந்தனைகளுக்கும் இணங்கி இருக்கமாட்டோம். கடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டும். ஆனால், செய்கின்ற முறை பற்றி அரசு கூறுவதில்லை.

சிறிய தொழில் முயற்சியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எந்த நிவாரணத்தையும் இந்த அரசு வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியுடன் இதற்கான வேலைத்திட்டத்தைத் தொடங்க முடியும். இதன் மூலம் உள்ளூர் உற்பத்தியையும் ஏற்றுமதி வர்த்தகத்தையும் அதிகரிக்க முடியும். இன்று இந்தப் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அதிகமான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றுக்கு முன்னுரிமை வழங்கும் வேலைத்திட்டங்களுக்கு நாம் பூரண ஆதரவு வழங்கத் தயார். –என்றார். (02)

## சினமடைந்த 'மொட்டு' எம்.பிக்கள் பத்து பேர் எதிர்க்கட்சி வரிசையில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சுப் பதவி வழங்காமல் இழுத்தடித்து வருவதால் அந்தப் பதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் அதிருப்தியடைந்துள்ளனர். இதனால் அவர்கள் எதிரணி வரிசையில் அமர்வதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

அவ்வாறு எதிரணி வரிசையில் அமர்ந்தாலும் அவர்கள் மொட்டுக் கட்சி உறுப்பினர்களாகவே இருப்பார்கள் என்றும், அரச எம்.பிக்களின் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை என்றும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானது முதல் இந்தப் பிரச்சினை இருந்து வருகின்றது. மொட்டுக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச 10 பேர் கொண்ட பெயர்ப்பட்டியலை ரணிலிடம் ஒப்படைத்து அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்குமாறு கேட்டு பலமாதங்களாகியுள்ளன. ஆனால், ரணில் இதோ தருகின்றேன், தருகின்றேன் என்றே இழுத்தடிப்பதால் இவர்கள் இப்போது ஆத்திரமடைந்துள்ளனர். (02)

## 90% நிலங்கள் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளனவாம்

வடக்கு கிழக்கில் இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் அதிகமான காணிகள் அப்பிரதேச மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசதிணைக்களத்தின் தென் மற்றும் மத்திய ஆசிய பணியகத்தின் பிரதி உதவி செயலாளர் அப்ரீன் அக்டரிற்கும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நீதியமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் வடக்குகிழக்கு உட்பட சமகாலப் பிரச்சினைகள் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு தெளிவுடுத்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார் நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் ஆலோசித்திருந்தார். அதற்கு அமைச்சர், அந்தச் சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ள விடயங்கள், அத்துடன் அவற்றை உள்வாங்குவதற்கான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தாக்கம் செலுத்திய காரணிகள் ஆகியவற்றை இதன்போது தெளிவுப்படுத்தியுள்ளார்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பிலும், அந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் ஏற்படும் மோசடிகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டத்தை அனுமதிக்கும்போதும் எதிர்க்கட்சியால் தடைகள் வந்தபோதும் , அதனை அனுமதிக்கப்பட்ட பின்னர் நாட்டுக்கு தேவையான சட்ட மூலங்களை அனுமதிக்கும்போது அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் அரசியல்வாதிகள் உட்பட சிவில் தரப்பின் பிரதிநிதிகள் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளார்கள். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வேண்டாம் என்றால் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா என்ற கருத்தாடல் நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்புசட்டமூலம் தொடர்பில் பிரேரணைகளை சமர்ப்பிக்க அனைவருக்கும் முடியுமானவகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தற்போது பிரேரணைகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

போர் நிறைவடைந்த நிலையில் பாதுகாப்பு படைகள் வசமுள்ள

2

## முள்ளிவாய்க்கால் நினைவூர்தி யாழ்ப்பாணத்தினுள் பயணம்



முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் நினைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஊர்திப் பவனி ஐந்தாவது நாளாக யாழ்ப்பாணம் நகர் மற்றும் நல்லூர் பகுதிகளில் பயணித்தது.

ஊர்திப்பவனி யாழ்.நகரில் தரித்திருந்தபோது பொதுமக்கள் பலரும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

2





முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி இன்றும் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. வடக்கு–கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமையத்தின் ஏற்பாட்டில் தமிழின படுகொலை நினைவேந்தல் நிகழ்வும்–தேசத்தின் கஞ்சி (முள்ளிவாய்க்கால் கஞ்சி) வழங்கும் நிகழ்வு இன்று காலை யாழ்ப்பாணம் திருநகர் பகுதியில் இடம்பெற்றது. பெருமளவான பொதுமக்கள் நினைவேந்தல் மற்றும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் உரும்பிராயிலும் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. கட்சியின் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

திருக்கோணமலை சல்லி கிராமத்திலும் இன்று கஞ்சி வழங்கப்பட்டது. இதன்போது பொதுமக்கள் உட்பட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் நிகழ்வில் கலந்துகொண்டு தங்கள் துக்கத்தை பகிர்ந்து கொண்டிருந்தார்கள். (03, 05)

# ஆளுநர்கள் நியமனத்துக்கு எதிராக மொட்டு துள்ளாதாம்

## சாகர கூறுகின்றார்

ஆளுநர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை எமது கட்சி சவாலுக்குட்படுத்தாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

மாகாணங்களுக்குரிய தமது பிரதிநிதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கின்றது. மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாகவே செயற்படுகின்றனர்.

எனினும், தற்போதைய நிலைமையானது, மாகாண சபை முறைமை உருவாக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றவில்லை.

தமது பகுதிக்குரிய தீர்மானங்களை தமது பிரதிநிதிகள் ஊடாக மக்கள் எடுப்பதற்காகவே மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது. மாகாண சபை முறைமை செயற்பட்டாலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. அதிகாரம் முழுவதும் ஆளுநர் வசம் இருப்பது ஜனநாயகத்துக்கு ஏற்புடைய விடயம் அல்ல.

ஒரு ஆளுநரின் செயற்பாடு திருப்தி இல்லையெனில் அவரை நீக்குவதும், புதியவரை நியமிப்பதும் ஜனாதிபதிக்குரிய அதிகாரம். அந்த விடயத்தில் கட்சி என்ற அடிப்படையில் நாம் தலையீடுகளை மேற்கொள்ளமாட்டோம்.

அமைச்சரவை நியமன விடயத்திலும் அப்படித்தான். குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கினால் நல்லது என யோசனை முன்வைத்தோமே தவிர அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை. - என்றார். (02)



# நான்கு நாள் பயணமாக இன்று சீன ஆளுநர்கொழும்பு வருகை

## பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்து

நான்கு நாள் விஜயமாக சீனாவின் யுனான் மாகாண ஆளுநர் இன்றைய தினம் வருகை தரவள்ளார்.

அவர் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளதோடு, பல்வேறு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடவுள்ளார்.

அவ்வாறு கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்குவதாக தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவிக்கையில்,

2023ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் சீனக்குடியரசின் யுனான் மாகாண ஆளுநர் வான்ங் யூகோ இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தின்போது சீனக் குடியரசின் யுனான் மாகாண வெளிவிவகாரங்கள் அலுவலகத்திற்கும், இலங்கையின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பரஸ்பர சுற்றுலா, பொருளாதாரம், சந்தை, வர்த்தகம், கல்வி மற்றும் சுற்றாடல் மனிதக் கலாசார பரிமாற்றங்கள், மக்களுடைய வாழ்க்கைத்தரம், சுகாதாரம் போன்ற துறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நிதி பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது என்றார்.

# பதற்றத்தால் அத்துமீறும் மக்கள் அப்பாவிகள் தாக்கப்படும் சோகம்

யாழ்ப்பாணக் கரையோரப் பகுதியான நாவாந்துறையில் இன்று காலை சிறுமியைக் கட்டத்தப் பார்த்தார் என்ற சந்தேகத்தில் பொது மக்கள் ஒருவரை அடித்துக் காயப்படுத்தி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர் மனநலம் பாதுக்கப்பட்டவர் என்றும் வவுனியாவில் இருந்து எப்படியோ நாவாந்துறையை வந்தடைந்த அப்பாவி என்றும் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

தாக்கப்பட்ட நபர் வீட்டிலிருந்து காணாமல்போயுள்ளார் என்று அவரது குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்துள்ளனர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

முன்னதாக இன்று காலை நாவாந்துறையில் பதற்றம் ஏற்பட்டது. சிறுமி ஒருத்தியைப் பின்தொடர்ந்து வந்து நீண்ட நேரமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார் ஏன்று கூறப்பட்ட ஒருவர் மீது ஊர் மக்கள் சந்தேகம் கொண்டனர். உடனடியாக அவரிடம் விசாரணை நடத்தினர். அவரது பதில் தெளிவற்றதாக இருந்ததால் பதற்றம் தொற்றிக் கொண்டது. கூட்டமும் அதிகரித்தது. இதனால் அந்த மனிதர் தாக்கப்பட்டு, மோசமாக நடத்தப்பட்டார்.

பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் வந்து அவரை அழைத்துச் சென்றனர். அவர் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தினர்.

## ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரை முன்னிலைப்படுத்தி புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவிப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

நாடு வங்குரோத்து நிலை அடைந்தற்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

முன்னாள் நிதியமைச்சரின் பஷில் ராஜக் வின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் நாடு வங்குரோத்து நிலை அடையப் போகிறது என்பதை அப்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக் விடம் குறிப்பிட்டோம். ஆனால் எமது கருத்துக்கு அவர் மதிப்பளிக்கவில்லை. தவறானதரப்பினரின் ஆலோசனைகளுக்கு முக்கியத்துவமளித்து நாட்டை வங்குரோத்து நிலைக்குள் தள்ளிவிட்டு இன்று சுகபோகமாக அரச வரபிரசாதங்களுடன் வாழ்கிறார்.

நாட்டு மக்கள் ராஜபக்க்களை முழுமையாகப் புறக்கணித்துவிட்டார்கள். தேர்தல் ஒன்று இடம்பெற்றால் அது உறுதிப்படுத்தப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொது ஜன பெரமுன ஆட்சியில் ஒன்றிணையப் போவதில்லை. பொருளாதார மீட்சிக்காக விரைவாக செயற்படுத்த வேண்டிய திட்டங்களை ஆட்சியாளர்களிடம் முன்வைத்துள்ளோம்.

ஜனாதிபதியின் கருத்தைப் போல் பொருளாதார மீட்சிக்கு 2048 ஆம் ஆண்டுவரை காத்திருக்க வேண்டிய தேவை கிடையாது. சிறந்த திட்டங்களை மே 22 பகிரங்கப்படுத்துவோம் -என்றார்.

# ஜனாதிபதி தேர்தலுக்கு ஏற்பாடுகளை செய்தால் ஆதரவை வழங்கத் தயார்

## சஜித் பிரேமதாஸ பகிரங்கம்



ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தால் அதற்கு ஆதரவை வழங்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் சுவகட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் தன் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தேர்தலை நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. அது ஜனநாயக ரீதியான செயற்பாடல்ல என்றும் ஜனாதிபதியினதும் , அவருக்கு ஆதரவளிப்பவர்களதும் தேவைக்கேற்ப தேர்தலை நடத்த முயற்சிப்பது தவறாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தல் சவாலை ஏற்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். சகல எதிர்கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, தேசிய கொள்கையை கேந்திரமாகக் கொண்ட பயணத்துக்கு நாம் தயாராகவுள்ளோம்.

எனவே ஊடகங்கள் , சமூக வலைத் தளங்கள் ஊடாக செய்திகளை உருவாக்கிக் கொண்டிருக்காமல் நேரடியாக இதுதொடர்பில் எம்முடன் கலந்துரையாடுமாறு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

# முள்ளிவாய்க்கால் படுகொலையாளிகளை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும்!

## சிவாஜிலிங்கம் வலியுறுத்தல்

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என தமிழ் த் தேசியக் கட்சி செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தை முன்னிட்டு இன்று, அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வை அடுத்து அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் சதீஸ், திருமதி சிவாஜிலிங்கம் மறறும் சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இங்கு மேலும் உரையாற்றிய எம்.கே.சிவாஜிலிங்கம் 'இலங்கையின் அரச படைகளினாலும், சிங்களக் காடையர் குழுக்களாலும் தமிழ் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்களுக்கு எமது அஞ்சலிகள்.

தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலை, போர்க் குற்றங்க ளுக் கான குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வோம். படுகொலைகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் நீதி கிடைக்கவும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் அரசியல் தீர்வைக் காண சுதந்திரத்துக்கான பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் வசிக்கும் மக்களும், 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் வாழ்ந்துவரும் புலம்பெயர் மக்கள் உட்பட அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் இ - என அவர் தெரிவித்துள்ளார். (5)

## விகாரைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக் காலமாக வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகள் மற்றும் தொல்பொருள் இடங்களுக்கு எதிராக கடும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இனவாத வெறி பிடித்த சில அரசியல்வாதிகளும் கடும்போக்குவாத அமைப்புகளும் நாட்டில் இனவாத, மதவாத நெருக்கடியை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் மிகவும் திட்டமிட்டு இந்த இடங்களில் போராட்டம் நடத்தி வருவதாக பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

இதபோன்ற மிக அண்மைச் சம்பவம் திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது. தாய்லாந்தில் இருந்து 270 வருடங்களுக்கு முன்னர் பிக்குகள் இலங்கைக்கு வந்திறங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணத்தை நினைவுகூரும் வகையிலான நிகழ்வுக்காக சியாமியத் துறவிகள் (பிக்குகள்) அங்கு வந்திறங்கினர். தமிழ் இனவாத அமைப்புக்களைச் சேர்ந்த சில பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் இந்த இடத்திற்கு வந்து கடும் எதிர்ப்பைக் காட்டியிருக்கின்றன.

இந்த நிலமையை இன்றைய ஆட்சியாளர்கள் கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டில் பாரதூரமான மத மற்றும் தேசிய நெருக்கடி உருவாகுவதைத் தடுக்க முடியாது.

இன்று இந்த விடயம் தொடர்பில் தற்போதைய ஆட்சியில் உள்ள எவரும் பேசுவதில்லை. இந்த ஆட்சி, ஆளுநர்கள் நியமனத்தில்கூட சிங்கள பௌத்த மக்களுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் தற்போது செயற்படுவதையே நாம் காணமுடிகிறது.

வடக்கு - கிழக்கின் பௌத்த பாரம்பரியம் பாதுகாக்கப்படவேண்டும். அத்துடன், நாடு முழுவதிலும் உள்ள பௌத்தர்களுக்கு மட்டுமன்றி, அனைவரினதும் சமய நல்லிணக்கத்திற்காக ஒன்றிணைந்து செயற்படும் வகையில், இவ்வாறான தீவிரவாத அமைப்புக்கள் மற்றும் அடிப்படைவாத மதக் குழுக்களைக் கட்டுப்படுத்தி ஆட்சியாளர்கள் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்பதை ஆணித்தரமாக நினைவூட்ட விரும்புகின்றோம். சட்டம் தீவிரமாகச் செயற்படுத்தப்படவேண்டும்

இந்தப் பின்னணியில் இந்நாட்டு சிங்கள பௌத்த மக்கள் அனைவரும் இணைந்து தமிழ் இனவாதத்திற்கு எதிராக நிற்கின்றனர். இந்தப் பிரச்சினை தொடர்பில் ஒரு நாள் ஏதாவது நெருக்கடி ஏற்பட்டால் இன்றைய ஆட்சியே அதற்கு நிச்சயமாகப் பொறுப்பு - என்றார்.

# மருந்து பொருள்களின் விலைகளில் மாற்றம்

## கெஹலிய ரம்புக்வெல அறிவிப்பு

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் மருந்து பொருள்களின் விலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்துரைத்த போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை மருந்து பொருளகளின் விலை தற்போது அதிகரித்து காணப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது,

எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற விலைகள் விரைவில் மாற்றம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

## 90 வீத ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளை விடுவிப்பது தொடர்பில் பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் வினவியபோது, இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் அதிகமான காணிகள் அப்பிரதேச மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களால் விடுவிக்காமல் உள்ள காணிகளை உரியவர்களுக்கு விரைவாக பெற்றுக்கொடுக்க எமது ஆட்சி விசேட கவனம் செலுத்தியுள்ளது.

காணி பிரச்சினை என்பது வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல, காணி தொடர்பில் சரியான மதிப்பீட்டை மேற்கொள்ள 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் வனப் பகுதி எத்தனை சதவீதமாக காணப்பட்டது என்பதை ஆராய்வதற்கு காணி அமைச்சு மற்றும் நில அளவை திணைக்களம் ஒன்றிணைந்து காணி அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தென்னாப்பிரிக்க அரசின் ஒத்துழைப்புடன் உண்மையை கண்டறிவதற்கான ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையின் நீதிக் கட்டமைப்பின் அபிவிருத்திக்காக ஐக்கிய அமெரிக்க இராச்சியம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனம் வழங்கும் ஒத்துழைப்பை வரவேற்பதாக அமைச்சர் விஜயதாச மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் நினைவூர்தி ...











(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நினைவூர்தி சார்பில் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

2009 முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக் கொத்தாகக் கொன்றழிக்கப்பட்டதை அடையாளப்படுத்தி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம்.

இதன் ஓர் அங்கமாக தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் இனப்படுகொலைக்கு நீதி கோரியும் இனப்படுகொலையை இளஞ்சந்ததியினருக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும் முல்லைத்தீவில் இருந்து முள்ளிவாய்க்கால் நினைவூர்திப் பவனியானது தொடங்கப்பட்டது.

இந்த ஊர்தி வடக்கின் ஐந்து மாவட்டங்கள் ஊடாகவும் பயணித்து இறுதியில் முள்ளிவாய்க்காலை அடையவுள்ளது. (03)

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்துக்கும் முள்ளிவாய்க்கால் நினைவூர்தி சென்றது

## குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்கும் அஞ்சலி







நேற்று (திங்கட்கிழமை) யாழ். நகரை வந்தடைந்த முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி இன்று காலை காங்கேசன்துறை வீதி வழியாக மருதனார்மடத்தைச் சென்றடைந்து அங்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, தொடர்ந்து மானிப்பாய் சென்பீற்றர்ஸ் தேவாலயத்தை சென்றடைந்தது.

அங்கு சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல், முள்ளிவாய்க்கால் நினைவு தொடர்பாக உணர்வுபூர்வமான வலிசுமந்த கதைகூறும் அஞ்சலி உரைகளை வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வலி.தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் விமானக் குண்டும் தாக்குதலில் பலியான பச்சிளம் சிறார்களின் நினைவுத் தூபிக்கு உணர்வுபூர்வ அஞ்சலி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அந்தப் பிரதேச மக்களால் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியிலுள்ள தூபிக்கு மரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் நல்லாயான் முன்பள்ளி சிறுவர்கள் தாம் அறியாத காலத்தில் நடந்த படுகொலைகளை நினைந்து அகம்தாழ்ந்து அஞ்சலி செலுத்தினர்.

# முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி இன்று மருதனார்மடத்தில் அஞ்சலி!

## கஞ்சியும் மக்களுக்கு வழங்கிவைப்பு







*முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நாளை மறுதினம் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் நிலையில் இன்று காலை 8 மணிக்கு நினைவு ஊர்தி மருதனார்மடத்தைச் சென்றடைந்தது. அங்கு வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் நினைவு ஊர்தியில் உள்ள தீபத்துக்கு மலரஞ்சலி செலுத்தி அகவணக்கமும் இடம்பெற்றது.*

*தொடர்ந்து அனைவருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது.*

*இந்த நிகழ்வில் மருதனார்மடத்தில் உள்ள வர்த்தகர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் ஊர்திக்கு அஞ்சலி செலுத்தினர். (5)*

# கணப்பார்வை பாதிப்பு ஏற்பட்ட விவகாரம்; இந்தியாவிடம் இழப்பீடு கோரியது இலங்கை!

## சுகாதார அமைச்சர் ஹெகலிய தகவல்

இந்திய மருந்துப் பயன்பாட்டினால் கணப்பார்வை பாதிப்பு ஏற்பட்ட விவகாரத்தை அடுத்து குறித்த மருந்தை தயாரித்த இந்திய நிறுவனத்திடம் இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரால் நிறுவனத்திடம் உத்தியோகபூர்வ கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்திடம் இருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை என்றும், மருந்தைக் கொள்வனவு செய்த முகவர்களிடமும் இதனை அறிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



நோயாளர்களின் அவல நிலை தொடர்பாகக் கவலை தெரிவித்த அமைச்சர், சில சமயங்களில் தர குறைபாடுகள் ஏற்படுகின்றன என்றும் உலக அளவிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளன எனவும் கூறியுள்ளார்.

மேலும் மருந்தைக் கொள்வனவு செய்யும் சப்ளையர் கடந்த ஏழு ஆண்டுகளாக இலங்கைக்கு மருந்துகளை விநியோகித்து வருகின்றனர் எனவும், இது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆணையம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி மூன்று அரச வைத்தியசாலைகளில் கண்புரை அறுவைசிகிச்சைக்குப் பின்னர் பயன்படுத்தப்படும் கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தியதால் பலருக்கு கண்பார்வை பாதிக்கப்பட்ட சம்பவம் நாட்டில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. சுமார் 30 நோயாளிகள் கண் பார்வை குறைபாடு ஏற்பட்டமை கண்டறியப்பட்ட நிலையில் அவர்கள் இழப்பீடும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பணிப்பெண்கள் நாட்டை வந்தடைந்தனர்

பணிப்பெண்களாகச்சென்று சட்டவிரோதமாக தங்கியிருந்த 32 இலங்கை பணிப்பெண்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

குவைத் நாட்டின் சட்டங்களைமீறிதங்கியிருந்தஇவர்கள் இலங்கை திரும்புவதற்காக தூதரகத்தில் தம்மைப் பதிவு செய்திருந்த நிலையிலேயே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

மேலும் இவர்கள் அநுராதபுரம், வவுனியா, கம்பஹா, கிண்ணியா, கொழும்பு, குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் திருகோணமலை மாவட்டத்தில் சிரமதானம்

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் மாவட்ட சுகாதார பணியகம் மற்றும் பிரதேச சபைகளூடாக நகர் பகுதியில் துப்புரவாக்கும் பணிகள் இன்று (செவ்வாய்கிழமை) முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி திருகோணமலை நகர சபை, பட்டினமும் சூழலும் பிரதேச சபை எல்லைகளுக்கு உற்பட்ட நகர் பகுதிகளில் பொதுசுகாதார பரிசோதகர்கள், முப்படையினர், பொதுமக்கள் இணைந்து இந்த சிரமதானப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக திருகோணமலை கொழும்பு பிரதான வீதியில் கடற்கரையோரங்களில் காணப்படுகின்ற திண்மக் கழிவு அகற்றும் நடவடிக்கையும் வரோதய நகர் பகுதியில் வீதியோரங்களில் காணப்படுகின்ற கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளும், தண்ணீர் தேங்கும் பொருள்களையும் அகற்றும் நடவடிக்கைகளும் இன்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் வீடுகளில் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக வீட்டையும் வீட்டுச்சுற்றுச் சூழல்களையும் பாதுகாப்பான முறையில் நுளம்புகள் பெருகாதவாறு தூய்மைப்படுத்தி டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டுமெனவும் இதன் போது அறிவிக்கப்பட்டுள்ளது.



# நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விழிப்பு நிலையுடன் நிதானமும் அவசியம்

சிறுமிகளைக் கடத்துவது தொடர்பாக கடந்த சில நாட்களாக அடுத்தடுத்துச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. தெற்கில் 16 வயது மாணவி ஒருவர் விடுதி ஒன்றின் மாடியிலிருந்து ஆடைகள் ஏதுமின்றி வீழ்ந்து இறந்தமை ஏற்படுத்திய பரபரப்பு, பதற்றம் நாடு முழுவதும் ஒரு அச்சநிலையைத் தோற்றுவித்திருக்கும் பின்னணியில் சிறுமிகளைக் கடத்த முயற்சி என்கிற அச்சம் மக்கள் மத்தியில் பரவத் தொடங்கியிருக்கின்றது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் அதிகம் பதிவாகத் தொடங்கியிருக்கின்றன. மன்னாரில் சிறுமிகளைக் கடத்த முற்பட்டார்கள் என்கிற சந்தேகத்தில் இருவர் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார். இன்று ஒரே நாளில் யாழ்ப்பாணம், ஒட்டுசுட்டான், மதவாச்சி போன்ற பகுதிகளிலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இதுபோன்ற சம்பவங்கள் திடீரென அதிகரிப்பதற்கு, உண்மையான சம்பவங்கள் காரணமாக அல்லது வதந்திகள் காரணமாக என்பதை சற்று நிதானித்து அவதானத்துடன் ஆராயவேண்டும். ஏனெனில் இதுபோன்ற வதந்திகளால் ஏற்படும் பதற்றம் பல்வேறு அசம்பாவிதங்களுக்கும் அப்பாவிகள் துன்புறுத்தப்படுவதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன.

இன்று யாழ்ப்பாணத்தில் அத்தகைய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணத்தின் கரையோரத்தில் உள்ள நாவாந்துறை என்ற ஊரில் இதுபோன்று சிறுமியைக் கடத்தும் நோக்கோடு நடமாடினார் என்கிற சந்தேகத்தில் ஒருவர் பிடிக்கப்பட்டுப் பொது மக்களால் துன்புறுத்தப்பட்டுள்ளார். பதற்றத்தில் அவசரப்பட்ட சிலர் அவரைத் தாக்கிக் காயங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். காவல்துறையினர் வந்து தீர விசாரிப்பதற்கு முன்னர் தான்தோன்றித்தன மாகத் தமது வீரத்தை அப்பாவிகளிடம் மட்டுமே காட்டக்கூடிய சிலர் அந்த மனிதரைத் தாக்கித் துன்புறுத்தியுள்ளனர்.

கடைசியில் அவர் மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் என்பது வவுனியாவில் இருந்து எப்படியோ இங்கு வந்து சேர்ந்து என்னசெய்வது எங்குபோவது என்றுதெரியாது தத்தளித்த அப்பாவி என்றும் காவல்துறையினரின் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது. எனவே பதற்றம் தேவையற்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதைக் கவனத்தில்கொள்ளவேண்டும்.

இதே நாவந்துறைப் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர், கிறீஸ் பூதம் என்கிற பதற்றம் காரணமாக யாழ்ப்பாணம் காவல்துறையினரால் இந்தக் கிராம வாசிகள் ஒவ்வொருவரும் அடித்து முறிக்கப்பட்டார் கள் என்பதை மறந்துவிடமுடியாது. அந்த வழக்குகளில் இன்று வரைக்கும் நீதி கிடைக்கவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

வதந்திகளும் பதற்றமும் மனிதர்களை நிலைதடுமாற வைத்துவிடுகின்றன. எல்லோருக்கும் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பது தொடர்பான ஆர்வமும் பதற்றமும் இருப்பது இயல்பானது. அதேநேரத்தில் குற்றம் செய்யாத ஒருவர் தண்டிக்கப்படக்கூடாது என்பதும் அதேயளவுக்கு நியாயமானது. குற்றமற்றவரைத் தண்டிப்பதற்கு என்றில்லை யாரையும் தண்டிப்பதற்குஎவருக்கும்அதிகாரமில்லைஎனும்போது, யாரையும் தாக்குவதோ அடித்துத் துன்புறுத்துவதோ செய்யக்கூடாதவை. பதற்றத்தில் இருந்தாலும் நிதானமாக நடந்துகொள்வது அவசியம்.

சந்தேகத்திற்கு இடமானவர்கள் குறித்து தகவல் அறிந்தால் அதனை காவல்துறையினருக்கோ, அவர்கள் வரத் தாமதமானால் அந்தப் பகுதிக் கிராம அலுவலருக்கோ தெரியப்படுத்தி அவர்களிடம் ஒப்படைக்கவேண்டுமே தவிர, சந்தேகத்தில் எவரையும் தாக்கக்கூடாது. விழிப்புடன் இருக்கும் அதே நேரம், நிதானமாகவும் இருக்கவேண்டும்.

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பற்றி இப்போது பேசத் தேவையில்லையாம்

## மொட்டு எம்.பி. கூறுகின்றார்



உரிய நேரத்தில் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம் என்று மொட்டுக்கட்சி எம்.பி. திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

2024 ஆம் ஆண்டு நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தொடர்பில் கட்சிகளுக்குள் இப்போதே கதை அடிபடத் தொடங்கியுள்ளது. இப்போதே இது பற்றிப் பேச வேண்டிய தேவை இல்லை.

நாங்கள் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஒருவரைக் கொண்டு வந்தோம். அவரை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் கடுமையாக உழைத்தோம்.

பல எதிர்பார்ப்புகளுடன் – கனவுகளுடன்தான் அவரைக் கொண்டு வந்தோம். ஆனால், திறமையற்ற நிர்வாகம் காரணமாக நிலைமை தலைகீழாக மாறியது.

கோட்டாபய ராஜபக்சவைக் கொண்டு வந்தோம். அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் ஆதரவு வழங்கினோம். ஆனால், அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

இப்போது புதிய ஜனாதிபதி ஒருவர் வந்துள்ளார். அவரது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டியது எங்களது கடமை. அதைவிட்டுவிட்டு இப்போதே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பற்றிப் பேசத் தேவையில்லை.

உரிய நேரத்தில் அந்த வேட்பாளரை நாம் வெளியே கொண்டுவருவோம். அவர் ரணிலாகவும் இருக்கலாம் அல்லது வேறு ஒருவராகவும் இருக்கலாம். இப்போது அது பற்றி நாம் கட்சிக்குள் விவாதம் நடத்தவில்லை.

மக்களுக்கு யார் ஜனாதிபதி என்பது முக்கியமல்ல. அவர்களுக்குத் தேவை நாட்டைச் சரியான முறையில் கொண்டு செல்கின்ற ஒருவர்தான். அப்படியான ஒருவர்தான் ஜனாதிபதியாக வேண்டும். – என்றார். (02)

# கணவனைக் கொன்று புதைத்த மனைவி; 33 வருடங்களின் பின் ஒப்புக்கொண்டார்!

33 வருடங்களுக்கு முன்னர் தனது தாயும், தாயின் சட்டரீதியற்ற கணவரும் இணைந்து தனது தந்தையைக் கொலை செய்தனர் என்று நபர் ஒருவர் ஊருபொக்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தற்போது விசேட தேவையுடையவராக மாறியுள்ள தாய், நான் செய்தது பாவம் என்று தனது சொந்தச் சகோதரியிடம் கூறிக்கொலையை ஒப்புக்கொண்டுள்ளார்.

அதற்கமைய, அவரது மகன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தததுடன், தனது தந்தை கொன்று புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கழிவறை குழியையும் அவர் பொலிஸ் அதிகாரிகளிடம் அடையாளம் காட்டியுள்ளார்.

அதையடுத்து, ஊருபொக்க காவல் நிலையத்தினர், நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

உடல் எச்சங்கள் நீதிவான் முன்னிலையில் தோண்டி எடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (02)

# சீரற்ற காலநிலையால் மாத்தறையில் மட்டும் 6 ஆயிரம் பேர் பாதிப்படைவு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மாத்தறை மாவட்டத்தில் வெள்ளத்தால் 6 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் மாத்தறையில் மட்டும் 1,697 குடும்பங்களைச் சேர்ந்த 6,390 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வீடு ஒன்று முழுமையாய்க்க இடிந்துள்ளதுடன் 39 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் கொட்டபொல மற்றும் அத்துரலிய பிரதேசங்கள் கடந்த சில நாள்களாக வெள்ளம் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

# மகனைக் கத்தியால் வெட்டி படுகொலை செய்த தந்தை!

தந்தை ஒருவர் தனது மகனைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்துள்ளார்.

இந்தச்சம்பவம் காலி இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. தந்தை மற்றும் மகனுக்கிடையில் வாய்த்தர்க்கம் அதிகரித்த நிலையில் தந்தை கத்தியால் மகனின் கழுத்தில் வெட்டியதைத் தொடர்ந்து மகன் மயக்கமுற்ற நிலையில் கீழே விழுந்துள்ளார்.

பலத்த காயத்துடன் மயக்கமுற்ற நிலையில் காணப்பட்ட மகன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வழியில் மரணம் சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 21 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

65 வயதுடைய தந்தை கைது செய்–யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (02)

# போதைப்பொருள்கள் பாவனை ஒழிப்பு பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு







சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்ததாக 'போதைவஸ்து பாவனை ஒழிப்பு' எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைவாக, சாய்ந்தமருது சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம் அவர்களின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது கமு/கமு/அல்–ஹிலால் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ. மஜீத், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நூருல் றிபா கலந்து கொண்டதுடன் வளவாளராக கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என். முஹம்மது தில்ஷான் கலந்து கொண்டு போதைப்பாவனையால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வில் சமூக மட்ட அமைப்புக்களின் தலைவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

இதன் மற்றுமொரு அங்கமாக சாய்ந்தமருது – 03, 05 ஆம் பிரிவு பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு சாய்ந்தமருது கமு/கமு/அல்–கமரூன் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். நபார் ஆகியோர் கலந்து கொண்டதுடன் வளவாளராக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் என்.எம். நௌசாத் கலந்துகொண்டு போதைப் பாவனையால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக சொற்பொழிவாற்றினார். (5)